யா/ஹாட்லிக் கல்லூரி,பருத்தித்துறை.

# J/ Hartley College, Point Pedro.

முதலாம் தவணைப் பரீட்சை–2020 – தரம் 10

**First Term Examination – 2020 – Grade 10**

| | | | | |
|---|---|---|---|---|
| வணிகக்கல்வியும் கணக்கீடும் | 60 | T | I, II, | இரண்டு மணித்தியாலம் 30 நிமிடங்கள்<br>Two Hours 30 minutes |

சுட்டெண் **Index No**

## வணிகக்கல்வியும் கணக்கீடும்

### பகுதி - I

**பொருத்தமான விடையினை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

01. வணிகங்களின் ஆரம்பத்திற்கான அடிப்படைக்காரணி எது?
    1. கேள்வியும் நிரம்பலும்
    2. உற்பத்தியும் விநியோகமும்
    3. தேவைகளும் விருப்பங்களும்
    4. பொருட்களும் சேவைகளும்

02. பின்வருவனவற்றுள் ஒரு மனித தேவையாக எதனைக் கருத முடியும்
    1. சோறும் கறியும்
    2. உணவும் பானங்களும்
    3. புத்தகங்களும் வெளியீடும்
    4. அழகுசாதனப் பொருட்களும் வாசனைப் பொருட்களும்

03. வணிகங்கள் ஆரம்பித்தது
    1. பணப்பாவனையின் விளைவாக
    2. கைத் தொழிற்புரட்சியின் விளைவாக
    3. போக்கு வரத்து முறையின் விளைவாக
    4. பண்டமாற்று முறையின் விளைவாக

04. தேவைகளின் பண்பாக கருத முடியாதது
    1. அத்தியாவசியமானவை
    2. வரையறுக்கப்படாதவை
    3. பொதுதத்தன்மை கொண்டவை
    4. தோற்றுவிக்கமுடியாதிருத்தல்

05. வணிக நடவடிக்கைகளின் திறனை அதிகரித்துக் கொள்வதற்காக தற்போது கணனிகளும் இணையமும் மிகவும் உதவியாகக் காணப்படுகின்றன. மேற்கூறிய கூற்றிலிருந்து இது என்ன வணிகச் சூழல் காரணி எனக் கருதமுடியும்
    1. கலாச்சாரச் சூழல்
    2. பொருளாதாரச் சூழல்
    3. தொழில் நுட்பச் சூழல்
    4. மக்கட் சூழல்

06. வணிக நிறுவனங்களில் பொதுவாகக் காணப்படக் கூடிய பிரதான நோக்கங்களாக கருதப்படக் கூடியவை
    1. இலாபத்தை உழைததல், தொழில் வாய்ப்புபை ஏற்படுத்திக் கொடுத்தல்
    2. தொழில் வாய்ப்பை ஏற்படுத்தல், ஊதியர் நலனில் கவனம் செலுத்துதல்
    3. இலாபத்தை உழைத்தல், நுகர்வோரது தேவைகள் விருப்பங்களை பூர்த்தி செய்தல்
    4. நுகர்வோரது தேவை விருப்பங்களை பூர்த்தி செய்தல் பொருட்கள் சேவைகளின் தரத்தினை மேம்மபடுத்தல்



kalvi.lk

07. அகச்சூழல் என்பதில் அடங்காத உருப்படி
1. உரிமையாளர்கள் 2. வழங்குனர்கள் 3. முகாமையாளர்கள் 4. ஊழியர்கள்

08. நுகர்வோர் பாதுகாப்புப் பெறும் வகையில் வணிகச் செயற்பாடுகள் காணப்படுகின்றதா என்பதில் அக்கறை உள்ள பிரிவினர் யாார்?
1. உரிமையாளர் 2. முகாமையாளர் 3. கடன்வழங்கும் நிறுவனங்கள் 4. அரசு

09. வணிகத்தில் அகச்சூழல் தொடர்பான ஒரு கருத்தையும் புறச்சூழல் தொடர்பான ஒரு வாய்ப்பையும் ஒழுங்குமுறைப்படி எடுத்துக்காட்டுவது
1. திறனுள்ள ஊழியர்கள் கிடைக்ககூடியதாக இருத்தலும் தொழில் வாய்ப்பில் பெண்கள் ஈடுபாடும்
2. வணிகங்களுக்கு ஆதரவான விதிகளை விதித்தலும் சரியான வணிக சந்தர்ப்பங்களை வழங்கலும்
3. உள்ளூர் உற்பத்திப் பொருட்களுக்கான மதிப்புயர்வும், சனத்தொகை வயது அதிகரித்தலும்
4. சிறந்த நிதி உறுதிதத் தன்மையம் முகாமையாளரின் கிடைப்பனவுத் தன்மையும்

10. "அழகுக்கலை நிலையங்கள்" எத்தகைய வணிக நிலையங்களாக கருதப்படும்
1. பொருள் உற்பத்தி வணிகம் 2. ஏற்றுமதி வணிகள்
3. அழகு வணிகம் 4. சேவை வணிகம்

11. தனியுடமை பங்குடமை இல்லாத ஆனால் வரையறுத்த கம்பனிகளில் காணப்படக்கூடிய ஓர் சிறப்பியல்பு
1. பொருளாதார நடவடிக்கையில் ஈடுபடல்
2. நோக்கம் ஒன்றிருத்தல்
3. சட்ட ரீதியான ஆளுமை காணப்படுதல்
4. தற்போது பொதுவாக இருத்தல்

12. விவசாய காப்புறுதி சபை எத்தகைய வணிக அமைப்பாகும்
1. அரச கூட்டுத்தாபனம் 2. அரச கம்பனி 3. அரச திணைக்களம் 4. அரச பங்குடமை

13. பங்குடமை வணிகத்தில் உள்ள பங்காளரது உச்ச எண்ணிக்கை 20 பேர் ஆகும். என வலியுறுத்தும் சட்டம்
1. 1918ம் ஆண்டின் 6ம் இலக்க வியாபாரம் பெயர்கள் பதிவுச்சட்டம்
2. 1907ம் ஆண்டின் வரையறுக்கப்பட்ட பங்குடமைச் சட்டம்
3. 2003ம் ஆண்டின் 9ம் இலக்க பாவனையாளர் அலுவலர்கள் சட்டம்
4. 2007ம் ஆண்டின் 7ம் இலக்க கம்பனி சட்டம்

14. பாராளுமன்றத்தினதும் உரிய அமைச்சரினதும் நிர்வாகத்தின் கீழ் இயங்கும் வணிக அமைப்பு எது?
1. அரச திணைக்களம் 2. அரச கூட்டுத்தாபனம்
3. அரச கம்பனி 4. அரச பங்குடமை

15. சுயமான திறந்த அங்கத்துவப் பண்புடைய வணிக அமைப்பு எது?
1. தனிவியாபாரம் 2. பங்குடமை 3. கம்பனி 4. கூட்டுறவு

16. நிதியை உருவாக்குவதற்காக பங்குடமையால் பயன்படுத்தக் கூடிய ஒரு நிதிமூலம் எது
1. சாதாரண பங்குகள் 2. முன்னுரிமைப்பங்குகள்
3. தொகுதிக்கடன்கள் 4. வங்கிக்கடன்கள்



kalvi.lk

7. கம்பனி அமைப்பின் உரிமையாளரை எவ்வாறு அழைப்பர்
1. பங்காளர் 2. உரிமையாளர் 3. பங்குதாரர் 4. தனிநபர்

18. சேவைக்கு மாத்திரம் உரிய சிறப்புப் பண்பானது
1. உற்பத்தி செலவொன்றை தாங்கிக் கொள்ளல்
2. தொட்டுணரக்கூடியது
3. பௌதீகத்தன்மை கொண்டது
4. களஞ்சியப்படுத்த முடியாமை

19. வணிகர்கள் பல்வேறு நலன்களை எதிர்பார்த்து தமது வணிகத்தை பதிவு செய்கின்றனர். இதனால் கிடைக்கும் இரண்டு அனுகூலங்கள்
1. கிரயத்தை குறைத்துக் கொள்ளலாம், இலாபத்தை அதிகரித்துக் கொள்ளலாம்
2. கிரயத்தை குறைத்துக் கொள்ளலாம், கடன் பெறும் வசதியை இலகுபடுத்திக் கொள்ளலாம்
3. அங்கீகாரம் கிடைத்தல், சட்ட ரீதியான பாதுகாப்பு கிடைத்தல்
4. ஆட்சேர்ப்பை இலகு படுத்தலாம், கடன் பெறும் வசதியை இலகுபடுத்தலாம்.

20. மூலதனத்திற்கு வழங்கும் வெகுமதி யாது?
1. வட்டி 2. வாடகை 3. கூலி 4. இலாபம்

21. வணிகத்தில் மூலதனத்தை ஈடுபடுத்துவோர்
1. முகாமையாளர் 2. உரிமையாளர் 3. ஊழியர்கள் 4. வழங்குநர்கள்

22. முன்னைய காலத்தில் உற்பத்தி நடவடிக்கைகளுக்கு மனித உழைப்பு பயன்படுத்தப்பட்டது. ஆனால் தற்போது பயன்படுத்தப்படுவது
1. கணனி மயப்படுத்தப்பட்ட இயந்திரங்கள் 2. மனித வலு
3. இயந்திர வலு 4. மேற்கூறிய யாவும்

Education கல்வி අධ්‍යාපන

23. வங்கியால் வாடிக்கையாளரது வைப்பிற்கு வழங்கப்படுவது
1. இலாபம் 2. வட்டி 3. கூலி 4. மூலதனம்

24. வணிகமொன்றில் காணப்படும் வாய்ப்புக்கள்
1. சர்வதேச வர்த்தக கட்டுப்பாடுகளை விதித்தல்
2. புதிய நகரங்களை உருவாக்குதல்
3. அதிக ஊழியர்கள் காணப்படுதல்
4. இயற்கை அனர்த்தங்கள்

25. அரசினால் மூலதனமிட்டு அரசிற்கு உடமையாகவுள்ள வணிக அமைப்பு
1. தனியாள் உடமை 2. பொதுத்துறை வணிகம்
3. கூட்டுறவு அமைப்பு 4. சங்க அமைப்பு

26. தனிநபர் ஒருவருக்கு உரித்தாகக் காணப்படும் வணிக அமைப்பு
1. பங்குடமை 2. கூட்டுத்தாபனம் 3. தனியாள் உடமை 4. கூட்டுறவு

27. கூட்டிணைக்கப்பட்ட கம்பனிகள் பதிவு செய்யும் சட்டம்
1. 2007ஆம் ஆண்டின் 07ம் இலக்க கம்பனிச்சட்டம்
2. 1918ம் ஆண்டின் வியாபார பெயர்கள் பதிவுச்சட்டம்
3. 1907ம் ஆண்டின் வரையறுக்கப்பட்ட பங்குடமைச்சட்டம்
4. 2003ம் ஆண்டின் 9ம் இலக்க பாவனையாளர் அலுவல்கள் சட்டம்



kalvi.lk

28. கூட்டுறவுச்சங்கத்தின் ஆகக் குறைந்த அங்கத்தவர் எண்ணிக்கை
1. 2 2. 7 3. 10 4. 20

29. வணிகத்தின் மீது தாக்கத்தை ஏற்படுத்தும் பொருளாதார காரணிகளை உள்ளடக்கிய சூழல்
1. தொழில் நுட்பச் சூழல் 2. பொருளாதாரச் சூழல்
3. வணிகச் சூழல் 4. புறச்சூழல்

30. தனிநபர்கள் வருமானத்திலிருந்து நுகர்விற்காகச் செலவிடாது வைத்திருக்கும் பகுதி
1. சேமிப்பு 2. வருமானம் 3. முதலீடு 4. வட்டி

31. வணிகத்திற்கு தேவையான நிதியினை ஈடுபடுத்தி அதன் இடர்களை பொறுப்பேற்கும் நபர்கள்
1. உரிமையாளர்கள் 2. பங்குடமையாளர்கள்
3. பங்காளர்கள் 4. பங்குதாரர்கள்

32. பங்குடமை அமைப்பில் காணப்படும் பங்காளரது உச்ச எண்ணிக்கை யாது?
1. 20 2. 7 3. 10 4. 27

33. பங்குடமை அமைப்பின் எழுத்துமூலமான ஒப்பந்தம்
1. பங்குடமை உறுதி 2. பங்குடமை ஒப்பந்தம்
3. பங்குடமை முரண்பாடு 4. பங்குடமைச் சட்டம்

34. பொதுத்தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு உருவாக்கப்படும் அமைப்பு
1. கூட்டுறவுச்சங்கம் 2. பங்குடைமை 3. தனிவியாபாரம் 4. கம்பனி

35. முழுமையான உரிமை அரசாங்கத்திற்கு உரித்தாகும் அமைப்பு
1. சங்க அமைப்பு 2. அரச கூட்டுத்தாபனம்
3. தனிவியாபாரம் 4. பங்குடமை

36. பாரியளவு மூலதன வளம் காணப்படும் வணிகம்
1. சிற்றளவு வணிகம் 2. பேரளவு வணிகம் 3. நடுத்தர வணிகம் 4. சிறிய வணிகம்

37. யப்பான் நாட்டு நாணய அலகு
1. யென் 2. ரூபா 3. டொலர் 4. றியால்

38. “நிலு டெக்ஸ்” வணிகம் எதனைக் குறிக்கும்
1. தனியுடமை 2. பங்குடமை
3. கூட்டிணைக்கப்பட்ட கம்பனி 4. சங்கம்

39. உற்பத்திக் காரணிகளுள் ஒன்று
1. மூலதனம் 2. கடன் 3. கூலி 4. இலாபம்

40. வணிகத்தின் நோக்கத்தினை நிறைவேற்றுவதற்கு கருமமாற்றும் செயன்முறை
1. முகாமைத்துவம் 2. வழிநடத்தல்
3. சேவை செய்தல் 4. உற்பத்தி செய்தல்

(40 X 1 = 40 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – II

❖ **அறிவுறுத்தல்**

❖ **முதலாம் வினா உட்பட பகுதி – I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி – II இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக**

01. கனிஸ்கன் என்பவர் ‘சுவையருவி’ என்னும் பெயரில் உணவகம் ஒன்றை நடாத்தி வருகின்றார். அவரது உணவகத்தினால் உற்பத்தி செய்யப்படும் உணவுப் பொருட்கள் தரமானதாகவும் சுத்தமானதாகவும் காணப்பட்டதனால் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை காலப் போக்கில் அதிகரிக்கத் தொடங்கியது. இதனால் வணிகத்தை மேலும் விரிவு படுத்த எண்ணி அவர் தனது நண்பனான சந்தோஷை வணிகத்தில் இணைத்துக் கொண்டார். சந்தோஷ் உணவு உற்பத்தி தொடர்பான பட்டம் பெற்றவர் (Hotel Management) ஆவார். இவர் உணவகத்தில் உணவு தயாரிக்கும் மற்றும் விநியோகம் என்பவற்றிற்கு பொறுப்பாக செயற்பட்டார். வணிகத்தின் பெயரில் மாற்றத்தை செய்யாமல் அதே பெயரில் நடத்திச் சென்றனர்.

வணிகத்தில் காணப்பட்ட சொத்துக்கள் பொறுப்புக்கள் தொடர்பான விபரங்கள்

| | |
|---|---|
| காணி கட்டடம் | 80000 ரூபா |
| இயந்திரம் | 70000 ரூபா |
| மோட்டார் வாகனம் | 50000 ரூபா |
| காசுமீதி | 20000 ரூபா |
| கடன்பட்டோர் | 7000 ரூபா |
| கடன் கொடுத்தோர் | 13000 ரூபா |
| வங்கிக்கடன் | 25000 ரூபா |

1. கனிஸ்கன் சந்தோஷை இணைத்துக் கொண்டதன் பின்னர் மேற்குறிப்பிட்ட வணிகம் எவ்வாறான வணிக அமைப்பாக மாற்றமடைகின்றது?
2. மேற்குறித்த வணிகத்தை பதிவு செய்வது தொடர்பான சட்டத் தேவைப்பாடுகளை குறிப்பிடுக?
3. குறிப்பிட்ட வணிகத்திற்கு காணப்படும் பலம் ஒன்றையும் வாய்ப்பு ஒன்றையும் குறிப்பிடுக?
4. தற்போது காணப்படும் நிலையில் குறிப்பிட்ட வணிக அமைப்பில் இரண்டு அனுகூலங்களையும் இரண்டு பிரதிகூலங்களையும் குறிப்பிடுக?
5. சுவையருவி வணிகத்தை அவை உற்பத்தி செய்யும் உற்பத்திகளின் தன்மைக்கேற்ப எத்தகைய வணிகமாக கருதமுடியும்?
6. கொடுக்கப்பட்ட தரவுகளின் அடிப்படையில் நடைமுறையல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதியை கணிப்பிடுக?
7. மொத்த மூலதனத்தின் பெறுமதியை கணிப்பிடுக?
8. நடைமுறைச் சொத்துக்களின் பெறுமதியை கணிப்பிடுக?
9. நடைமுறைப் பொறுப்பு ஒன்றினை குறிப்பிடுக?
10. நடைமுறையில்லா பொறுப்பு ஒன்றினை தருக?

(20 புள்ளிகள்)



kalvi.lk

## பகுதி – I

**இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடை தருக**

01. நிகழ்காலத்தில் மனிதனது தேவைகளும் எண்ணிறைந்த விருப்பங்களும் வணிகத்தினால் பூர்த்தி செய்யப்படுகின்றன. வணிக எண்ணக்கருவின் அடிப்படையில் பண்டமாற்று முறையில் ஆரம்பித்த வணிகமானது இன்று இலத்திரனியல் வணிகமாக மாற்றமடைந்துள்ளது.

1. அ. மேற்குறிப்பிட்டுள்ள கூற்றில் வணிகம் என்பதன் கருத்து யாது?
   ஆ. தேவை, விருப்பங்களுக்கிடையிலான இரண்டு வேறுபாடுகளை தருக?
2. வணிகமொன்றினால் உற்பத்தி செய்யப்படும் உற்பத்திகளின் தன்மைக்கு ஏற்ப இரண்டு வகைப்படுத்தலாம். அவை எவை?
3. கல்யாணி தளபாட உற்பத்தி நிலையம் வீட்டு, அலுவலக தளபாடப் பொருட்களை உற்பத்தி செய்து விற்பனை செய்யும் ஒரு வணிக அமைப்பாகும். அதன் உற்பத்தி காரணிகளான நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சி என்பவற்றிற்கு உதாரணம் ஒன்று வீதம் தருக?
4. நீர் உமது பாடசாலை சிற்றுண்டிச்சாலையில் உரிமையாளர் எனக் கருதுக. உம்மிடமிருந்து வாடிக்கையாளர்களாகிய மாணவர்கள் எதிர்பார்க்கும் விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
5. வருமானத்திற்கும் செலவுகளுக்கும் இடையிலான வேறுபாடு எவ்வாறு அழைக்கப்படும்?

(10 புள்ளிகள்)

02. 1. வணிகச் சூழலில் உள்ள புறச்சூழலில் உள்ளடங்கும் காரணிகள் நான்கினைக் குறிப்பிடுக?
2. அகச்சூழல் என்றால் என்ன?
3. சட்டச்சூழலில் அடங்கும் விடயங்கள் யாவை?
4. பொருளாதார சூழல் காரணிகளுக்கு நான்கு உதாரணம் தருக?
5. உள்நாட்டு வணிகத்தில் பூகோள மயச்சூழலினால் ஏற்படும் சாதகமான விளைவுகள் இரண்டு தருக?

(10 புள்ளிகள்)

03. 1. வணிக அமைப்புக்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
2. தனியார் துறை வணிக அமைப்புகளுக்கு ஐந்து உதாரணங்கள் தருக?
3. நோக்க அடிப்படையில் வணிக அமைப்புக்களை எவ்வாறு வகைப்படுத்தலாம்?
4. பாரியளவு வணிக அமைப்புக்களின் இயல்புகளைக்கூறுக?
5. தனியாள் வணிகத்தின் பண்புகள் ஐந்து கூறுக?

Education අධ්‍යාපන

(10 புள்ளிகள்)

## பகுதி – II

### கணக்கியல்

01. 1. அ. கணக்கீடு என்பதால் கருதப்படுவது யாது?
   ஆ. வணிகமொன்றின் உரிமையில் மாற்றத்தை ஏற்படுத்தும் சந்தர்ப்பங்கள் இரண்டு தருக?
2. அ. பொறுப்பு என்பதன் கருத்து?
   ஆ. பொறுப்புக்களின் வகைகள் யாவை?
3. அ. கணக்கீட்டு கூறுகள் யாவை?
   ஆ. சொத்துக்கள் என்றால் என்ன?
4. பாலன் வணிகத்தில் பின்வரும் விடயங்களை சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்னும் அடிப்படையில் வகைப்படுத்துக?
   வங்கிக்கடன், மோட்டார்கார், கடன்பட்டோர், கட்டடம், நிலையான வைப்பு, அட்டுறு செலவுகள், கடன் கொடுத்தோர், வங்கி மேலதிகப்பற்று.
5. உரிமையாளரினால் தனிப்பட்ட பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்வதை எவ்வாறு அழைப்பர்?

(10 புள்ளிகள்)



kalvi.lk

02. 1. பொறுப்புக்களின் பண்புகளைக் கூறுக?
2. நடைமுறைப் பொறுப்பு என்றால் என்ன?
3. நடைமுறை அல்லாத பொறுப்பு என்றால் என்ன?
4. வணிகத்தின் உரிமையாளர் சார்பாக காணப்படும் சொத்துக்களின் அளவு எவ்வாறு அழைக்கப்படும்?
5. நிதிக்கூற்றில் சொத்துக்கள் எதனடிப்படையில் பதிவு செய்யப்படுகின்றன?

(10 புள்ளிகள்)

03. 1. வணிகத்திற்கு வருமானம் வரும் வழிகள் யாவை?
2. வணிகத்தில் மேற்கொள்ளப்படும் செலவினங்கள் யாவை?
3. பின்வருவன வெதுப்பக உற்பத்தி நிறுவனமொன்றில் காணப்பட்ட பேரேட்டு கணக்குகள் ஆகும்.
சம்பளக்கணக்கு, கடன்பட்டோர் கணக்கு, கட்டடக்கணக்கு, வங்கிகக்கடன் கணக்கு,
மின்சாரக்கட்டணக்கணக்கு, அட்டுறு செலவுக்கணக்கு, விற்பனைக்கணக்கு, பெற்ற கழிவுக்கணக்கு
மேற்குறித்த கணக்குகளை பின்வரும் வகையில் வகைப்படுத்திக் காட்டுக?
1. சொத்துக்கள் கணக்கு 2. வருமானக்கணக்கு 3. பொறுப்புக்கணக்கு 4. செலவுக்கணக்கு
4. விற்பனையின் இரண்டு வகைகளும் எவை?
5. கொள்வனவு நடைபெறும் இரண்டு வகைகளும் எவை?

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන



kalvi.lk

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும்
Zoom app மூலம் எமது வகுப்புகளில்
இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457